## கேரள - தமிழக எல்லைகளில் டெங்கு காய்ச்சல் பரவல்: மருத்துவ கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும்



**சென்னை:** கேரள-தமிழக எல்லைப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவிவருவதால், மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துமாறும், தேவையான அளவுக்கு மருந்துகளை இருப்புவைக்குமாறும் அனைத்து மாவட்ட நிர்வாகங்களுக்கும், பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

கேரள மாநிலத்தில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால், அங்கு டெங்கு மற்றும் எலிக்காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருகிறது. டெங்குவின் தீவிரத்தால் உயிரிழப்பும் ஏற்படுகிறது.

அதேபோல, கேரளாவை ஒட்டியுள்ள கோவை, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அந்த மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளில் டெங்கு காய்ச்சல் பாதிப்புடன் சிகிச்சைக்கு வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

இதையடுத்து, தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறும், சிகிச்சைக்கான மருந்துகளை போதிய அளவில் இருப்பு வைக்குமாறும் மாவட்ட நிர்வாகங்களுக்கு, பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அனைத்து மாவட்ட நிர்வாகங்களுக்கும் பொது சுகாதாரத் துறை அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:
மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தினமும் காய்ச்சல் பாதிப்புக்காக சிகிச்சைக்கு வருவோரின் விவரங்களைத் திரட்டி, அது தொடர்பாக கண்காணிக்க வேண்டும். அதனடிப்படையில், அனைத்துப் பகுதிகளிலும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஏதேனும் ஓரிடத்தில் தொடர்ந்துகாய்ச்சல் பாதிப்புகள் கண்டறியப்பட்டால், அங்கு மருத்துவ முகாம்களை நடத்த வேண்டும். மருத்துவக் கட்டமைப்புகளை தயார் நிலையில் வைத்திருப்பதையும், தேவையான மருந்துகளை கையிருப்பில் வைத்திருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரி வளாகங்களில் கொசு உற்பத்தியாகாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு காய்ச்சல் பாதிப்புகள் கண்டறியப்பட்டால், உடனடியாக துணை சுகாதார இயக்குநர்களுக்கு தகவல்தெரிவிக்க வேண்டும். இவ்வாறுசுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எதிர்கால தலைமுறையின் அறிவாற்றலை பெருக்கும் வகையில் தலைநிமிர்ந்து நிற்கும் நூலகம் - தொண்டர்களுக்கு முதல்வர் கடிதம்**



**சென்னை**: எதிர்கால தலைமுறையின் அறிவாற்றலை பெருக்கும் வகையில் தென் தமிழகத்தின் அறிவுத் திருக்கோயிலாக மதுரை மாநகரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் தலைநிமிர்ந்து நிற்கிறது என்று திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் கட்சித் தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து திமுக தொண்டர்களுக்கு அவர் நேற்று எழுதிய கடிதத்தில் கூறியுள்ளதாவது: மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டை முன்னிட்டு, திமுக மற்றும் அரசு சார்பில் ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மாதம்தோறும் அவர் நினைவாகபயனுள்ள திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. கடந்த 2008-2009-ல் அண்ணா நூற்றாண்டை கருணாநிதி முதல்வராக இருந்து கொண்டாடியதுபோல, தற்போது கருணாநிதி நூற்றாண்டை மக்களுக்கு பயனளிக்கும் வகையில் சிறப்பாக கொண்டாட பல முன்னெடுப்புகளை செய்து வருகிறேன்.

திமுகவின் திராவிட மாடல் ஆட்சி, கருணாநிதி நூற்றாண்டை, அவரைப் போலவே பயனுள்ள திட்டங்களை நிறைவேற்றி கொண்டாடி வருகிறது. கடந்த ஜூன்15-ம் தேதி கிண்டியில் கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை,ஜூன் 20-ம் தேதி திருவாரூரில் கலைஞர் கோட்டம் திறக்கப்பட்டன. எதிர்கால தலைமுறைக்கும் வழிகாட்டும் கருணாநிதியின் புகழை போற்றும் வகையில் ஜூலை 15-ம் தேதிமதுரையில் உலகத் தரத்திலான கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்துவைக்க உள்ளேன்.

புத்தகங்கள் மீது கருணாநிதி கொண்டிருந்த ஆர்வம், காதலையும், அவரது ஆழமான வாசிப்பு, படைப்பாற்றலையும் அனைவரும் அறிவார்கள். பள்ளிப் பருவத்தில் எழுத தொடங்கி, 94 வயது வரை ஓயாமல் எழுதியவர். அவர் எழுதிய பக்கங்கள் 2 லட்சத்துக்கு மேல் இருக்கும் என்கின்றனர் ஆய்வாளர்கள். அவரது நூல்களைக் கொண்டே ஒரு நூலகம் அமைத்துவிடலாம். சிறுகதை, புதினம், நாடகம், உரைநடை, கடிதம், கட்டுரை, கவிதை, தன்வரலாறு என எண்ணற்ற நூல்களை தமிழ் சமுதாயத்துக்கு தந்தவர்.


சென்னை கோட்டூர்புரத்தில் கருணாநிதி உருவாக்கிய அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மனதில் கொண்டு, மதுரை மாநகரில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை சிறப்பாக அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில்மகேஸ் ஆகியோர் முழுமையாக நிறைவேற்றியுள்ளனர்.

அடித்தளம், தரைதளம், அதனுடன் 6 தளங்கள் என 2.13 லட்சம் சதுரஅடி பரப்பளவில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

நான் எண்ணியதைவிடவும், வேறு யாரும் எண்ணிப்பார்க்க முடியாத வகையிலும் எதிர்கால தலைமுறையின் அறிவாற்றலை பெருக்கும் வகையில் தென் தமிழகத்தின் அறிவுத் திருக்கோயிலாக மதுரை மாநகரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் தலைநிமிர்ந்து நிற்கிறது. அது வருங்கால தமிழர்கள் தலைநிமிர்ந்து நடக்கும்படியான வாய்ப்புகளுக்கு வாசலாக, வழிகாட்டியாக நிச்சயம் இருக்கும்.

இந்த நூலகம், படிக்கும் பழக்கத்தை மேம்படுத்தி வளர்ப்பதற்கும், நேரடி நூல் வாசிப்பு மட்டுமின்றி, பல்வேறு தொழில்நுட்பங்களின் வாயிலாக கற்று, உலகத் தரத்துக்கேற்ப இளைய தலைமுறையினரை உயர்ந்து நிற்கச் செய்ய துணைநிற்கும் என்றார்.

**மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் - கற்றலுக்கான மையம்**



மதுரையில் புதிதாக கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் குழந்தைகளை கவர்வதற்காக வண்ணமயமாக அமைக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பிரிவு. படம்: நா. தங்கரத்தினம்.

பிரம்மாண்டமாக தயாராகியுள்ள கலைஞர் நூலகத்தில் பல்வேறு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நூல்களை இரவல் வழங்குவதற்கும்

பெற்றுக்கொள்வதற்குமான பிரிவு, சொந்த நூல்கள் எடுத்துவந்து வாசிப்பதற்கான பிரிவு, குழந்தைகள் பிரிவு, கலைஞர் பிரிவு, தமிழ் நூல்கள் பிரிவு, நாளிதழ், பருவ இதழ்கள், ஆராய்ச்சி இதழ்கள், ஆங்கில நூல்கள், போட்டித் தேர்வுகள், அரிய நூல்கள், பல்லூடகம், நூல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் அதன் பயன்பாட்டுக்கும் தேவைக்கும் உகந்த விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**கற்றலுக்கான மையம்:** குழந்தைகள் நிகழ்ச்சிகளுக்கான அரங்கம், சிறார்களுக்கான திரையரங்கம், சிறார் அறிவியல் கூடம், பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிநூல் ஸ்டுடியோ, கலைக்கூடம் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால், கலை, பண்பாடு, அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த கற்றலுக்கான மையமாகவும் இது இயங்கும்.

2.13 லட்சம் சதுர அடிப்பரப்பளவில், அடித்தளம் தரைத்தளத்தோடு 6 தளங்களுடன் பிரம்மாண்டமாக நூலகம் கட்டப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் பதிப்பிக்கப்படும் அறிவியல் நூல்கள், நவீன வெளியீடுகள், வரலாற்று நூல்கள், மருத்துவ நூல்கள், தொழில்நுட்ப நூல்கள் என வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த 3.3 லட்சம் புத்தகங்கள் இந்நூலகத்துக்காகக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

பார்வையற்றோருக்கான புத்தகங்கள் மட்டுமில்லாமல் அனைத்துப் புத்தகங்களையும் அவர்கள் வாசிக்கும்படி DAISY MP3, BRF, Audio format-களில் வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது.

**குழந்தைகளுக்கு குதூகலம்:** கலைஞர் நூலகத்தில் குழந்தைகளுக்கான கதைசொல்லல், அறிவியல் அறிதல், கலைகள், விளையாட்டு, யோகா, கைவினைச் செய்முறைகள் போன்ற தொடர் நிகழ்வுகளையும் விடுமுறை காலச் சிறப்பு நிகழ்ச்சிகளையும் மேற்கொள்ளத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**தேடலே கொண்டாட்டமாய்..:** மகளிருக்கான சுயதொழில் பயிற்சி வகுப்புகள், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டி நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சிகள், மொழி, இலக்கியம், வரலாறு, பொருளாதாரம், ஊடகம் போன்ற வெவ்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்களுடன் தொடர் உரையாடல்கள், மாற்றுத் திறனாளிகளுக்கெனத் தனிப்பட்ட சிறப்புநிகழ்ச்சிகள், நம்முடைய தொன்மையான நாகரிகத்தை அறிந்துகொள்ளும் வகையில் கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், பாறை

ஓவியங்கள், அகழாய்வுகள் குறித்து ஆளுமைகளுடன் உரையாடல்கள் என வாசிப்புத் தேடலை அறிவுக் கொண்டாட்டமாக மாற்றும் முயற்சிகளும் இந்நூலகத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இவையெல்லாம் இணையதளம் வாயிலாகவும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் பரப்பப்படும். மிக முக்கியமாக நூலகத்துக்கான நிரந்தரக் கற்றல் வளங்களாகப் பராமரிக்கப்படும்.

**வெள்ளத்தில் தத்தளிக்கும் டெல்லி | காரணம் ஆக்கிரமிப்புகளா அல்லது கனமழையா?**



டெல்லி சாலையில் பெருக்கெடுத்து ஓடும் யமுனை ஆற்றின் நீர் | படம்: ஷிவ்குமார் புஷ்பகர்

**புதுடெல்லி**: கடந்த செவ்வாய்க் கிழமைக்குப் பின்னர் தலைநகர் டெல்லியில் பெரியளவில் மழை இல்லை. ஆனாலும் இன்று (வியாழக்கிழமை) காலை டெல்லியில் ஐடிஓ, சிவில் லைன்ஸ் பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்து மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலகம் உட்பட முக்கியப் பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. ஏற்கெனவே கடுமையான போக்குவரத்து நெருக்கடியை சந்திக்கும் டெல்லியில் இந்த திடீர் வெள்ளத்தால் மேலும் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது. இந்நிலையில் கனமழை இல்லாமல்

ஏற்பட்ட இந்த திடீர் வெள்ளம் தொடர்பாக பல்வேறு விவாதங்கள் எழுந்துள்ளன.

**மழையில்லாமல் வெள்ளம்!** மழையில்லாமல் வெள்ளமா என்று ஆச்சரியம் ஏற்படலாம். அதற்கு சில காரணங்களை நிபுணர்கள் பட்டியலிடுகின்றனர். யமுனை ஆற்றின் நீர்மட்டம் தொடர்ந்து வரலாறு காணாத வண்ணம் உயர்ந்து வருவதே நகருக்குள் ஏற்பட்டுள்ள இந்த திடீர் வெள்ளத்துக்கு முதல் காரணமாக இருக்கிறது. இன்று காலை 9 மணியளவில் யமுனையின் நீர்மட்டம் 207.25 மீட்டராக இருந்தது.

யமுனையின் நீர்மட்டம் இவ்வளவு தூரம் உயர்ந்ததற்கு ஹரியாணா மாநிலத்தில் இருந்து ஹத்னிகுண்ட் தடுப்பணை வாயிலாக வெளியேற்றப்படும் உபரி நீர் தான் காரணம். ஆனால் ஒவ்வொரு பருவமழை காலத்திலும் இதுபோல் ஹத்னிகுண்ட் தடுப்பணை வாயிலாக உபரி நீர் வெளியேற்றப்பட்டு யமுனையில் கலப்பது இயல்புதான். இது டெல்லிவாசிகளுக்கே தெரிந்த விஷயம்தான். என்றாலும் கூட இந்த ஆண்டு மட்டும் இந்த அசாதாரண சூழலுக்குக் காரணம் என்னவென்ற கேள்விகள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

**குறைந்த நேரத்தில் வந்து சேர்ந்த நீர்:** மத்திய நீர்வள ஆணையத்தின் அதிகாரிகள் இது குறித்து கூறுகையில், "ஹத்னிகுண்ட் தடுப்பணையில் இருந்து டெல்லிக்கு உபரி நீர் வெகு சீக்கிரமாக வந்தடைந்துள்ளது. நீர்வழிப் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகள் காரணமாக அது கடந்து செல்ல ஒரு குறுகிய பாதை மட்டுமே உள்ளது. வெள்ளம் பாய்வதன் வேகமும் மிக அதிகமாக இருக்கிறது. இதனால் பல வழிகளிலும் உபரி நீர் வெகு துரிதமாக யமுனையை வந்தடைந்து அங்கு நீர்மட்டத்தை தொடர்ந்து உயரச் செய்து வருகிறது. அதேபோல், வண்டல் மண் அதிகமாக சேர்ந்ததன் காரணமாக யமுனை ஆற்றுப் படுகையும் உயர்ந்துள்ளது. இதனாலேயே அதிக மழையில்லாவிட்டாலும் கூட யமுனையின் நீர்மட்டம் தொடர்ந்து வரலாறு காணாத புதிய உச்சங்களை தொட்டு வருகிறது" என்றனர்.

**குறுகிய காலத்தில் அதிகனமழை:** இவை மட்டுமல்லாது டெல்லியில் கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமையில் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகனமழை பெய்தது. ஞாயிறு காலை 8.30 மணி நிலவரப்படி 15.3 செ.மீ மழை பதிவானது. இதனால் யமுனை ஆற்றில் நீர்மட்டம் உயர்ந்திருந்த நிலையில் அதில் மேலும் மேலும் ஹத்னிகுண்ட் தடுப்பணை வாயிலாக வரும் நீரும் சேர்ந்து கொண்டே இருக்கிறது.

டெல்லி கனமழை குறித்து டெல்லி முதல்வர் கேஜ்ரிவால் கூறுகையில், ”வெறும் 24 மணி நேரத்தில் 15 செ.மீ மழை பெய்துவிட்டது. இதனை சமாளிக்க டெல்லி அரசு அமைப்புகள் பழக்கப்பட்டிருக்கவில்லை. ஒருவேளை ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட அளவு மழை பெய்திருந்தால் நிலைமை இவ்வளவு மோசமாக இருந்திருக்காது” என்று கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது. இந்தச் சூழலில் இன்று மாலை 5 மணிக்குள் யமுனையின் நீர்மட்டம் இன்னும் உயரும் என்றே மத்திய நீர்வள ஆணையம் கணித்துள்ளது.

**எல்விஎம்-3 ராக்கெட் மூலம் சந்திரயான்-3 நாளை விண்ணில் ஏவப்படுகிறது**



**சென்னை**: நிலவின் தென்துருவத்தில் தரையிறக்கப்பட உள்ள சந்திரயான்-3 விண்கலம் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் நாளை (ஜூலை 14) விண்ணில் செலுத்தப்படுகிறது.

சந்திரயான்-3 விண்கலத்தை சுமார் ரூ.615 கோடியில் இஸ்ரோ வடிவமைத்தது. இந்த விண்கலம் எல்விஎம்-3 (ஜிஎஸ்எல்வி மார்க்-3) ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள 2-வது ஏவுதளத்தில் இருந்து நாளை (ஜூலை 14-ம்

தேதி) மதியம் 2.35 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இதற்கான இறுதிகட்ட பணிகளுக்கான 25.30 மணி நேர கவுன்ட்டவுன் இன்று (ஜூலை 13-ம் தேதி) மதியம் 1 மணிக்கு தொடங்கவுள்ளது.

சந்திரயான்-3 விண்கலம் 3,900 கிலோ எடை கொண்டது. ஏற்கெனவே ஆர்பிட்டர் நிலவை சுற்றி வருவதால் இந்த முறை லேண்டர், ரோவர் கலன்கள் மட்டும் அனுப்பப்படுகிறது. இவை உந்துவிசை கலன் (Propulsion Module) மூலம் நிலவின் சுற்றுப்பாதைக்கு எடுத்துச் செல்லப்படும். அதன்பின் உந்துவிசை கலனிருந்து லேண்டர் பிரிந்து நிலவில் மெதுவாக தரையிறக்கப்படும். தொடர்ந்து லேண்டர் மற்றும் ரோவர் கலன்கள் 14 நாட்கள் நிலவில் ஆய்வு மேற்கொள்ளும்.

இந்த விண்கலத்தில் மொத்தம் 7 ஆய்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை நிலவுக்கு சென்றவுடன் தனித்தனியாக ஆய்வுகளை மேற்கொள்ளும். இந்த திட்டம் வெற்றியடைந்தால் அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்குப்பின் நிலவில் விண்கலத்தை தரையிறக்கிய 4-வது நாடு மற்றும் தென் துருவத்துக்கு சென்ற முதல் நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைக்கும். மேலும், சந்திரயான்-3 திட்ட இயக்குநரான பி.வீரமுத்துவேல் தமிழகத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது: சந்திரயான்-3 இறுதிகட்ட சோதனைகளும் நல்லபடியாக நடத்தப்பட்டன. சந்திரயானின் லேண்டர் கலன் நிலவின் தென்துருவத்தில் ஆகஸ்ட் 23 அல்லது 24-ம் தேதி தரையிறக்கப்பட உள்ளது. கடந்த முறை ஏற்பட்ட தோல்வியின் கற்பிதங்களை அடிப்படையாக கொண்டு நிலவின் சூழலுக்கேற்ப லேண்டர், ரோவர் கலன்கள் செயல்படுவதற்காக அதன் கட்டமைப்புகளில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

லேண்டரில் எரிபொருளும் அதிகளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. லேண்டரின் கால் பகுதிகள் பலப்படுத்தப்பட்டு, பெரிய சோலார் பேனல்கள் உட்பட சாதனங்கள் மேம்படுத்தப்பட்ட அதிநவீன வசதிகளுடன் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## காமன்வெல்த் சாம்பியன்ஷிப்: தங்கம் வென்றார் ஞானேஸ்வரி




ஞானேஸ்வரி யாதவ்

**கிரேட்டர் நொய்டா:** காமன்வெல்த் சாம்பியன்ஷிப் பளுதூக்குதல் போட்டி கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான 49 கிலோ எடை பிரிவில் இந்தியாவின் ஞானேஸ்வரி யாதவ் 176 கிலோ ( ஸ்நாட்ச் பிரிவில் 78 கிலோ, ஜெர்க் பிரிவில் 98 கிலோ) எடையை தூக்கி தங்கப் பதக்கம் வென்றார். மற்றொரு இந்திய வீராங்கனையான ஜிலி தலபெஹரா 169 கிலோ எடையை தூக்கி (75 94) வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

ஆடவருக்கான 55 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் முகுந்த் அஹர் 239 கிலோ (106 133) எடையை தூக்கி தங்கம் வென்றார். வங்கதேசத்தின் ஆஷிகுர் ரஹ்மான் தாஜ் 207 கிலோ (92 115) எடையை தூக்கி வெள்ளிப் பதக்கம் பெற்றார். மகளிருக்கான 45 கிலோ எடை பிரிவில் இந்தியாவின் கோமல் கோஹர் 154 கிலோ (68 86) எடையை தூக்கி தங்கப் பதக்கம் வென்றார். இலங்கையின் ஸ்ரீமாலி சமரகோன் திவிசேகர முதியன்சேலாகே 146 கிலோ (61 85) எடையை தூக்கி வெள்ளிப் பதக்கம் கைப்பற்றினார்.

EVA STALIN IAS ACADEMY

**ஆசிய தடகள சாம்பியன்ஷிப்: வெண்கலம் வென்றார் அபிஷேக் பால்**



அபிஷேக் பால்

**பாங்காக்:** ஆசிய தடகள சாம்பியன்ஷிப் தாய்லாந்து தலைநகரான பாங்காக்கில் நேற்று தொடங்கியது. இதில் ஆடவருக்கான 10 ஆயிரம் மீட்டர் நடை பந்தயத்தில் இந்தியாவின் அபிஷேக் பால் வெண்கலப் பதக்கம் வென்றார்.

அவர், பந்தய தூரத்தை 29 நிமிடம் 33.26 விநாடிகளில் கடந்தார். ஜப்பானின் ரென் டாஸாவா (29.18.44) தங்கப் பதக்கமும், கஜகஸ்தானின் கிமுதை ஷட்ராக் (29:31.63) வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.

**ஆன்லைன் கேமிங் மீது 28% வரி; புற்றுநோய் மருந்துகளுக்கு விலக்கு: ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் ஒப்புதல்**



நிர்மலா சீதாராமன்

**புதுடெல்லி**: ஆன்லைன் கேமிங், குதிரைப் பந்தயம் மற்றும் கேசினோக்களுக்கு 28 சதவீதம் ஜிஎஸ்டி விதிக்க சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சில் முடிவு செய்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

ஜிஎஸ்டி கவுன்சிலின் 50-வது கூட்டம், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. அனைத்து மாநில பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஜிஎஸ்டி தொடர்பான கோரிக்கைகளையும் முன்வைத்தனர். முன்னதாக, ஆன்லைன் கேமிங், குதிரைப் பந்தயம் மற்றும் கேசினோ நிறுவனங்களின் வருவாய்க்கு 28 சதவீதம் வரி விதிக்க ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல் அளித்தது.

அதேநேரம், புற்றுநோய் மற்றும் அரிய வகை நோய்க்கான மருந்துகள் மற்றும் சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்க பயன்படும் உணவுப் பொருட்கள் ஆகியவற்றுக்கு ஜிஎஸ்டி வரியில் இருந்து விலக்கு அளிக்கவும் ஒப்புதல் தரப்பட்டது. தனியார் நிறுவனங்கள் வழங்கும் செயற்கைக்கோள் ஏவுதள சேவைகளுக்கும் ஜிஎஸ்டி வரியில் இருந்து விலக்கு அளிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**தியேட்டர் உணவுகளுக்கான வரி குறைவு:** தியேட்டர்களில் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் பானங்கள் மீதான வரியை 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்க ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மேலும், எல்டி ஸ்லாக் எனப்படும் சிமென்ட் வகை மற்றும் ஃப்ளை ஆஷ் எனப்படும் எரி சாம்பல் மீதான ஜிஎஸ்டி வரியும் 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இமிடேஷன் ஜரி நூல் வகை மீதான மீதான ஜிஎஸ்டி வரியும் 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று செய்தியாளர்கள் சந்திப்பில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

**2075-ல் உலகின் 2வது பொருளாதார வல்லரசாக இந்தியா உருவாகும்: கோல்ட்மேன் சாக்ஸ் அறிக்கை**




2075ல் அமெரிக்காவை பின்னுக்கு தள்ளி உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா முன்னேறும் என்று கணித்து கோல்ட்மேன் சாக்ஸ் முதலீட்டு வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது. ஜப்பான், ஜெர்மனி, அமெரிக்காவைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா முன்னேறும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது இந்தியா உலகின் 5வது பெரிய பொருளாதாரமாக இருக்கின்றது.

மக்கள் தொகை, புத்தாக்கம், தொழில்நுட்பம், அதிகரிக்கும் மூலதன முதலீடுகள், உயரும் தொழிலாளர் திறன் ஆகியனவற்றில் அடிப்படையில் இந்த கணிப்பை நடத்தியுள்ளதாக வங்கி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதன்படி அடுத்த இருபது ஆண்டுகளில் இந்தியாவில் சார்பு விகிதம் (dependancy rates) என்பது மற்ற பிராந்தியங்களின் விகிதத்தோடு ஒப்பிடும்போது மிகமிகக் குறைவாக இருக்கும் என்று தெரிகிறது. சார்பு விகிதம் என்பது ஒரு நாட்டின் மக்கள் தொகையில் ஒரு பொருள் ஈட்டும் நபரைச் சார்ந்திருப்போரின் விகிதத்தை குறிப்பிடுவது.

கோல்ட்மேன் சாக்ஸ் ஆராய்ச்சிக் குழுவின் இந்தியப் பொருளாதார நிபுணர் சாந்தனு சென்குப்தா கூறுகையில், "இந்தியாவில் அதிகரித்து வரும் தொழிலாளர் உற்பத்தித் திறன், மூலதன முதலீடுகள் மற்றும் புத்தாக்கம் ஆகியன நாட்டை வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் செல்லும். நாட்டின் மக்கள் தொகை வளம் மட்டுமே நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தை உயர்த்தும் காரணியாக இருந்துவிட இயலாது. புத்தாக்கமும், அதிகரித்து வரும் தொழிலாளர் உற்பத்தித் திறனும் தான் இதனை ஊக்குவிக்கும். இவைதான் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார வல்லரசான இந்தியாவை மேலும் முன்னேற்றப் போகிறது. இந்தியாவில் சார்பு விகிதம் குறையும் போது சேமிப்பு விகிதம் அதிகரிக்கும். அதிகரிக்கும் வருவாய், ஆழமான நிதித்துறை வளர்ச்சி மூலம் மூலதன முதலீடுகளையும் அதிகரிக்க இயலும். இதுவும் சேமிப்பை அதிகரிக்கும்." என்றார்.

இத்தகைய சூழலில் இந்திய அரசாங்கம் உட்கட்டமைப்பு வசதிகளை குறிப்பாக சாலை வசதி, ரயில்வே மேம்பாடு ஆகியனவற்றில் கவனம் செலுத்தி வருகிறது. அதனால், தனியார் நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க இதுவே உகந்த தருணம் என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

**வீழ்ச்சி அபாயம்:** இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிய அச்சுறுத்தல் ஏற்படுமேயானால் அது பொருள் ஈட்டும் தகுதியுடைய தொழிலாளர் சக்தி (லேபர் ஃபோர்ஸ்) பங்களிப்பு வளர்ச்சி காணாமல் இருந்தால் மட்டுமே நிகழும். ஆனால், கடந்த 15 ஆண்டுகளில் இந்த விகிதம் படிப்படியாக குறைந்துள்ளது. அதுவும் மகளிர் பங்களிப்பு ஆண்களை ஒப்பிடுகையில் குறைவாக இருக்கிறது என்றும் அதில் ஒரு கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அந்த அறிக்கை எச்சரிக்கின்றது.